| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| உறுப்பினர்-செயலர், | ஆணையாளர், |
| சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், | சென்னை மாநகராட்சி, |
| எண்.1 காந்தி இர்வின் சாலை, | சென்னை-600 003. |
| எழும்பூர், சென்னை-8. | |

---

கடித எண். பி3/27861/05 நாள். 17.10.06.

அய்யா,

பொருள்: சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் – திட்ட இசைவு – நகர நிலஅளவை எண்.3, பிளாக் எண்-3 முல்லம் கிராமம், மனை எண்.3673சி – 3வது அவின்யு மற்றும் 5வது அவின்யு, அண்ணாநகர் சென்னையில் தரைதளம் + 3 தளங்கள் கொண்ட 4 தொகுப்பு கட்டிடங்களில் 32 குடியிருப்பும், இரண்டு தொகுப்பு கட்டிடங்கள் இடிப்பதும் மற்றும் ஏற்கெனவே இருக்கும் 21 தொகுப்பு கட்டிடங்கள் மற்றும் காவல் நிலையம் கட்டிடம் வரன்முறைப்படுத்த ஒப்பளிக்கப்பட்டிருப்பது – தொடர்பாக.

பார்வை:
1. சிறப்புக் கட்டிடப்பிரிவு 1151/05இல் 17.11.05 அன்று பெறப்பட்ட திட்டஅனுமதி விண்ணப்பம்
2. இதே எண் கொண்ட இவ்வலுக கடித நாள் 22.5.06.
3. தங்களின் 31.5.06 கடிதத்துடன் கிடைக்கப்பெற்ற திருத்திய வரைப்படம்

...

நகர நிலஅளவை எண்.3, பிளாக்கு எண்.3, முல்லம் கிராமம், மனை எண்.3673-சி, 3வது அவின்யு மற்றும் 5வது அவின்யு, அண்ணாநகர், சென்னை-யில் தரைத்தளம் +3 தளங்கள் கொண்ட 4 தொகுப்பு கட்டிடங்களில் 32 குடியிருப்பும் இரண்டு தொகுப்பு கட்டிடங்கள் இடிப்பதும் மற்றும் 21 தொகுப்பு கட்டிடங்கள் மற்றும் காவல்நிலையம் வரன்முறைப்படுத்த சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்பளிக்கப்படுகிறது.

அ) கழிவுநீரகற்று அமைப்பைப் பொறுத்தவரை, சென்னை குடிநீர் வாரியத்திடம் முறையான விண்ணப்பத்தை நேரடியாகச் சமர்ப்பித்து, உரிய அமைதியைப் பெற்ற பின்தான் வேலைகளை ஆரம்பிக்கவேண்டும்.

ஆ) குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை, சென்னைக் குடிநீர் வாரியம் குடிக்கவும் சமையலுக்காகவும் மட்டுமே நீர் வழங்க இயலும். வழங்கப்படும் நீரின் அளவும் ஒரு குடியிருப்பிற்கு அதிகபட்சமாக 5 பேருக்கும், ஒருவருக்கு ஒரு நாளைக்கு 10 லிட்டர் அளவிற்குமே இருக்கும். வேறு உபயோகங்களுக்குத் தேவையான நீருக்காக கட்டுபவரே வேறு ஏற்பாடுகளை உறுதி செய்து கொள்ளவேண்டும். மேலும் கழிவு நீரகற்றுத் திட்டத்திற்கு ஒப்புதல் பெற்றபிறகு, குடிநீர் இணைப்பிற்காக விண்ணப்பிக்க வேண்டும். இணைப்பிற்கான அனுமதி கிடைத்தபின்தான் குழாய் அமைப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அனைத்துக் கிணறுகளும், மேல்நிலைத் தொட்டிகளும், கழிவுநீர்த் தொட்டிகளும், கொசுத் தொல்லைகள் இல்லாவண்ணம் சுகாதார முறையில் பாதுகாப்பாக மூடப்பட்டிருக்க வேண்டும்.

2. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டியுள்ளபடி மழைநீர் சேகரிப்பு அமைப்பைத் திருப்திகரமாக அமைக்காதிருப்பது, ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்திலிருந்தும், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்கும் மீறிய செயலாகக் கருதப்படும். அதன்மீது அமலாக்க நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

3. பி/சிறப்பு கட்டிடம்/9எ லிருந்து NW 1/2006, நாள் 17.10.2006 என எண்ணிடப்பட்ட இரு ஒப்பளிக்கப்பட்ட வரைபடங்கள்/வரைபடங்களின் தொகுதிகள் இத்துடன் அனுப்பப்படுகின்றன.

...2.

4. இந்த ஒப்பளிப்பு இறுதியானது அல்ல. உள்ளாட்சி அமைப்புச் சட்டத்தின் கீழ் கட்டிட அனுமதி பெறுவதற்கு விண்ணப்பதாரர் சென்னை மாநகராட்சியை அணுகவேண்டும். கட்டிட அனுமதி பெற்றப்பிறகு தான் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கலாம்.

5. கட்டிடம் கட்டுவதைக் கண்காணிக்குமாறும், அது ஒப்பளிக்கப்பட்ட வரைவடத்தின்படியே கட்டப்படுகிறது என்பதை உறுதிசெய்து கொள்ளும்படியும், அவ்வாறில்லாமல், ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டப்பட்டால் உடனுக்குடனேயே அமலாக்க நடவடிக்கை எடுக்குமாறும் உள்ளாட்சி அமைப்பு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள,

[signature] 19/10/06

உறுப்பினர்-செயலருக்காக.

[initials] 19.10.2006

இணைப்பு:
1. ஒப்பளிக்கப்பட்ட வரைபடத்தின் 2 படிகள்
2. திட்ட அனுமதியின் 2 படிகள்

நகல்: 1. காவல்துறை தலைவர்,
தலைமை அலுவலகம்,
டி.ஜி.பி. வளாகம்,
மயிலாப்பூர், சென்னை-4.

2. உறுப்பினர்,
உரியதுறை (Appropriate Authority)
108 உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

3. வருமானவரி ஆணையர்,
168 உத்தமர் காந்தி சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை-34.

4. துணைத்திட்ட அமைப்பாளர்,
செயலாக்கப்பிரிவு,
செ.பெ.வ.குழுமம், சென்னை-8.

கேகே/18/10